# தமிழனிடம் மண்டியிட்ட இந்தி 'வெறி' அதிகாரி!



சேது

சென்னை சூளைமேட்டைச் சேர்ந்தவர் சேது. விவசாயியான இவர், தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆர்வலராகவும் உள்ளார். கடந்த செப்.29-ம் தேதி சூளைமேடு அஞ்சல் அலுவலகத்தில் விரைவு அஞ்சல் அனுப்பச் சென்றவருக்கு ஏற்பட்ட அனுபவம் தான் தமிழ் ஆர்வலர்களை கொதிப்படையச் செய்துள்ளது.


விரைவு அஞ்சல் முகவரியில் (ஸ்பீடு போஸ்ட்) தமிழில் எழுதியிருந்த சேதுவை ஏற இறங்க பார்த்த அசோக்குமார் என்ற வட மாநில ஊழியர், "எனக்கு தமிழ் தெரியாது. வேண்டுமானால் ஆங்கிலத்தில் எழுதி வாருங்கள்!'' என்று முகத்தில் அடித்தாற் போல் விரைவு தபாலைத் தூக்கி கடாசியுள்ளார்.

"தமிழ்நாட்டில் இருந்து கொண்டு தமிழில் எழுதித் தந்தால் ஏற்க மாட்டீர்களா?" என்று சேது பதிலுக்கு மல்லுக்கட்ட, இருவருக்கும் வாக்குவாதம் ஆகிவிட்டது. உடனடியாக அங்கேயிருந்த மற்ற ஊழியர்கள் சேதுவைச் சூழ்ந்து கொண்டு, "ஏன் சார், அவருக்குத்தான் தமிழ் தெரியாதுனு சொல்றார்ல, நீங்க கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிகிட்டு இங்கிலீஷ் தெரிஞ்ச யார்கிட்டயாவது எழுதி வாங்கிட்டு வர வேண்டியது தானே!" என்று புத்திமதி(!?) கூறியுள்ளார்கள்.

"ஏங்க, தமிழர்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாட்டிலுள்ள ஒரு அஞ்சல் அலுவலகத்தில் தமிழில் எழுதிக் கொடுத்தால் ஏற்க முடியாதுனு சொல்றார். அவரை யாரும் கேள்வி கேட்க மாட்டேங்கறீங்க. அப்ப அஞ்சல் அலுவலகத்திற்கு வர்ற தமிழர்கள் எல்லோரும் ஆங்கிலம் கத்துகிட்டு தான் வாரணுமா? மக்கள் அதிகம் பயன்படுத்தக் கூடிய இதுபோன்ற பொது இடங்களில் தமிழ் தெரிந்த அதிகாரிகளை பணியமர்த்த வேண்டுமென்பது தெரியாதா?" என்று பதிலுக்கு இடித்துள்ளார் சேது.

இதற்கு அஞ்சல் நிலைய பணியாளர்களெல்லாம் ஒன்று சேர்ந்து, "தமிழை மட்டும் வைத்துக் கொண்டு இனி ஒன்னும் முடியாது. மத்திய அரசாங்க ஆபிசில சீக்கிரமா எல்லா போஸ்டிங்களிலும் இந்தி படித்தவர்கள் மட்டுமே வேலை பார்ப்பார்கள். அப்போ என்ன பண்ணப் போறீங்க?'' என்று நக்கல் அடித்துள்ளனர்.

மிகுந்த மனவேதனையடைந்த சேது, அஞ்சல் அலுவலரிடம் இது குறித்து புகார் அளிக்க, பின்பு இருதரப்பும் பரஸ்பரம் சூளைமேடு



அசேக்குமாரின் மன்னிப்புக் கடிதம்...

தமிழ் தெரியாத அந்த ஊழியர் என்னோடு சண்டையிட்டது ஒருபுறமிருந்தாலும் தமிழ் தெரிந்த அதிகாரிகள் அவருக்கு ஆதரவாக செயல்பட்டு என்னை மிரட்டியதைத்தான் ஏற்க முடியவில்லை. விரைவு கடிதத்தில் எனது தாய்மொழியான தமிழில் எழுதும் உரிமை எனக்குள்ளது என்ற அடிப்படை அறிவுகூட இல்லாமல் அவர்கள் நடந்துகொண்ட விதம் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது" என்றார்.


இந்திய அரசியலமைப்பு சட்டப்படி மத்திய அரசுப் பணிகளில் 90% சம்பந்தப்பட்ட மாநிலத்தை சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். 10% பணியிடத்தில் மட்டுமே வேற்று மாநிலத்தவர் பணியமர்த்தப்பட வேண்டும் என்பது விதி. ஆனால் இப்போது இவ்விதி காற்றில் விடப்பட்டு வேற்று மாநிலத்தவர் அதிகமாக பணியமர்த்தப்படுவது நடைபெற்று வருகிறது.

கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் இந்த 90% இட ஒதுக்கீடு தம் மாநில மக்களுக்கே கிடைக்கும் வகையில் சிறப்பு சட்டம் இயற்றியுள்ளனர். அதுபோன்ற சட்ட பாதுகாப்பு இங்கு இல்லாத காரணத்தால் மத்திய அரசு அலுவலகங்களில் தமிழும் தமிழர்களும் கூனிக் குறுகி நிற்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசு அலுவலகங்களிலும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும் தமிழ் வஞ்சிக்கப்படுவது அவர்களுக்கு தெரிவதில்லை. தமிழ்நாட்டை ஒட்டியுள்ள எல்லையோர கிராமங்களில் வசிப்பவர்கள் அண்டை மாநிலங்களின் மொழியிலேயேகூட பத்திரப்பதிவு செய்யலாம் என்ற வசதி தமிழ்நாட்டில் உள்ளது. வந்த மொழிகளை எல்லாம் வாழ வைக்கும் தமிழ்நாட்டில், சொந்த மொழியான தமிழ் ஒடுக்கப்படுவதுதான் கொடுமை" என்று வேதனைப்பட்டார் சேது.

இது தொடர்பாக அடுத்து என்ன செய்ய போகிறீர்கள் என்று கேட்டதற்கு "மத்திய அரசு பணிகளில் தமிழ் தெரியாத ஆட்களை பணியில் அமர்த்தக் கூடாது என்று உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கவுள்ளேன்" என்றார் துணிச்சலோடு.

சம்பந்தப்பட்ட சூளைமேடு அஞ்சல் அலுவலகத்தில் விசாரித்தபோது, மென்று விழுங்கிய அதிகாரிகள், "சம்பந்தப்பட்ட அதிகாரி தொடர்பாக உயரதிகாரிகளுக்கு தகவல் அளித்துள்ளோம். அவரை அப்பணியில் தொடர வைப்பதும் மாற்று பணிக்கு அனுப்புவதும் மேல் அதிகாரிகளின் கைகளில் தான் உள்ளது!" என்றனர்.




தனியார் கூரியர் சேவை மூலம், கொஞ்சம் கொஞ்சமாக அஞ்சல் சேவை நலிவடைந்து வரும் சூழலில், இப்படியொரு மொழி வெறி தேவையா? அஞ்சல் துறையினர் உணரும் தருணம் இது!

**படங்கள்: ம.செந்தில்நாதன்**